சாமானியரை அடித்துக் கொலை மிரட்டல் விடுத்த த.வெ.க. எம்.எல்.ஏ.

துணை சபாநாயகர் ரவி சங்கர் மீது நடவடிக்கை எடுக்காமல் மூடி மறைக்கும் Dummy CM விஜய்!

கழகச் சட்டத்துறை இணை செயலாளர் இ.பரந்தாமன் அறிக்கை!

சென்னை, நவ.11-

"சாமானியரை அடித்துக் கொலை மிரட்டல் விடுத்த த.வெ.க. எம்.எல்.ஏ. - துணை சபாநாயகர் ரவிசங்கர் மீது நடவடிக்கை எடுக்காமல் மூடி மறைக்கும் டம்மி சி.எம். விஜய் என்று கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

துறையூர் தொகுதியில் நிலவி வரும் குடிநீர் பிரச்சினை பற்றி புகார் அளித்தும் த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்காததால், துறையூர் தொகுதி த.வெ.க சட்டமன்ற உறுப்பினரும், துணை சபாநாயகருமான ரவிசங்கரிடம் புகார் அளிக்க சென்ற கண்ணபிரான் காலனியைச் சேர்ந்த கார்த்திக் குமார் என்கிற சாமானியரை, கடுமையாக தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளார் ரவி சங்கர். அதுபற்றி கார்த்திகுமார் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் புகார் தாரரை மிரட்டி மூடி மறைக்க துடிக்கிறார் சோப்ளாங்கி CM விஜய்.

ஊழல்களில் ஆட்சி நடத்தும் விஜய்!

ரீல்ஸ்சிலும், சமூக ஊடகங்களிலும் மட்டுமே அரசை நடத்தி வரும் வெத்து த.வெ.க அரசு இதை மூடி மறைக்க, பாதிக்கப்பட்டவரை மிரட்டி 6 take கள் வீடியோ எடுத்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் சொல்லியபடி பேசா விட்டால் குடும்பத்தையே கொன்று விடுவோம் என கார்த்திக் குமாரை மிரட்டி உள்ளனர். இது அத்தனைக்கும் த.வெ.க. காவல்துறையும் உடந்தையாக இருந்துள்ளது வெட்கக் கேடு. மணச்சநல்லூர் காவல் ஆய்வாளர் கிருபாநிதி என்பவர் தன்னை மிரட்டி துணை சபாநாயகர் வீட்டிற்கு அழைத்து சென்று வீடியோ எடுத்தாக புகார்தாரர் கூறி உள்ளார். இதுதான் த.வெ.க. அரசின் காவல்துறை லட்சணம். இரண்டு நாட்களுக்கு முன்பு மதுவிலக்கு போலீசாரே கஞ்சாவை மறைத்து வைத்து மதுக்கடைக்கு எதிராக போராடியவரை கைது செய்ய திட்டம் போட்டு கையும் களவுமாக சிக்கினார். அவர் மீதும் நடவடிக்கை எடுக்க வில்லை. காவல்துறை உங்கள் நண்பன் என்பார்கள் ஆனால் இன்று த.வெ.க. ஆட்சியில் காவல்துறை பொது மக்களின் வில்லனாக மாறி உள்ளது.

பண்டிகை தினத்தன்று 11 கொலைகள்!

பண்டிகை தினத்தன்று பதினோரு கொலைகள் நடந்துள்ளன, அச்சமூட்டும் கொலை செய்திகள் இன்னும் வந்து கொண்டே இருக்கின்றன. அதனை தடுக்க துப்பில்லாத த.வெ.க. அரசின் காவல் துறை த.வெ.க.வின் அடியாளாக மாறி பொது மக்களை மிரட்டி வருகிறது.

மாற்றம் மாற்றம் என சொல்லி மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த கேடு கெட்ட சக்தி தற்போது அவர்களுக்கு வாக்களித்தவரையே அடித்து துன்புறுத்தி உள்ளது.

தொகுதி பிரச்சினைகளை சட்டமன்ற உறுப்பினர்களிடம் போய் சொல்லுங்கள், அவர்கள் எல்லை சாமி என்றெல்லாம் அள்ளி வீசினார் Dummy CM . தற்போது விஜய் பேச்சை நம்பி போய் பிரச்சினையை சொன்னவரை கடுமையாக தாக்கி அவமானப்படுத்தி அனுப்பியுள்ளார் TVK MLA ரவி சங்கர். அதோடு பாதிக்கப்பட்டவரையே மிரட்டி அவர்கள் எழுதி கொடுத்த Script யை பேச வைத்து ஒரு விடியோ எடுத்துள்ளனர். புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் புகார் அளித்தவரை மிரட்டி புகாரை திரும்ப பெற கூறி உள்ளனர்.

மக்கள் பிரச்சினைகளை தீர்த்துவைக்க முடியா விட்டாலும் பரவாயில்லை, அவர்கள் கோரிக்கை வைத்தாலே தாக்குவது எந்த ஜன நாயகத்திலும் இதுவரை நடக்காத ஒன்று.

ரசிகர் மன்ற டிக்கெட் பிரச்சினைகள் போல மக்கள் பிரச்சினையை திமிர்த்தனமாக கையாண்டு தாக்குவது, அந்த நபரை மிரட்டி பொய் வாக்குமூலம் தர சொல்வது இது தான் நீங்கள் தமிழ்நாட்டுக்கு தரும் மாற்றமா சோப்ளாங்கி CM ?

Extended weekend ல் offline mode போவதை விட்டு உங்க M.L.A க்கள் மக்களை நடத்தும் விதத்தை முதலில் பாருங்கள்.

தாக்குதல் நடத்திய த.வெ.க. எம்.எல்.ஏவும், துணை சபாநாயகருமான ரவிசங்கர், மிரட்டலுக்கு துணை போன காவல்துறை அதிகாரிகள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுத்து, கைது செய்யுங்கள்.

வெத்து வசனம் பேசி வண்டி ஓட்டி வரும் அட்டக்கத்தி CM sir இந்த சம்பவத்திற்காவது வாயை திறந்து பேசுவீர்களா ? நடவடிக்கை எடுப்பீர்களா ?.

இவ்வாறு கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்துமணி சிந்துமணி



அந்துமணி : ஏண்டி சிந்து, "மேகதாது அணைகட்ட யாரிடமும் அனுமதி வாங்க வேண்டிய அவசியமில்லை" அப்படின்னு எவ்வளவு தீமிரா கர்நாடக முதலமைச்சர் சொல்லி இருக்காரு! கேக்க யாருமில்லையா?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; அவங்க எந்தக் காலத்திலே தமிழ்நாட்டை மதிச்சிருக்காங்க; இங்க இருக்கிற காங்கிரஸ் காரங்க 'சட்டம்' பேசுவாங்களே தவிர, வாய்திறந்து அங்கே போய் கேக்க மாட்டாங்க. அவங்களை கூட்டணியிலே வெச்சுட்டு இருக்கும் செயலற்ற த.வெ.க. பத்தி சொல்லவே வேண்டாம். தமிழ்நாடுதான் பாவம்.

ஊக்க ஊதியம், பணி நியமனம், நலன் பாதிப்பு உள்ளிட்ட

ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை உடனே நிறைவேற்றுக!

தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, நவ.11-

தமிழ்நாடு அரசு ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றாமல் காலம் தாழ்த்தி வருவது ஆசிரியர்கள் மத்தியில் பெரும் பதற்றத்தினை ஏற்படுத்தி உள்ளது எனவே உடனடியாக கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என மாநில பொதுச் செயலாளர் முனைவர் நா. சண்முகநாதன் அவர்கள் வலியுறுத்தி உள்ளார்

அவர் விடுத்த வேண்டுகோளில் கூறியதாவது:

தமிழ்நாடு அரசு ஆசிரியர் நலனுக்காக கீழ்க்கண்ட கோரிக்கைகள் நிலுவையில் உள்ளன. இவற்றை உடனடியாக நிறைவேற்றி ஆசிரியர்களின் அதிருப்தியை போக்க வேண்டும்.

ஊக்க ஊதியம் – ஊதிய முரண்பாடு!

10.03.2020க்கு முன்னர் உயர்கல்வி முடித்து ஊக்க ஊதிய உயர்வு பெறாமல் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய ஊக்க ஊதிய உயர்வு வழங்க வேண்டும். உயர்கல்விக்கான ஊக்க ஊதியத்தை மீண்டும் வழங்க வேண்டும். பி.லிட், பி.காம், பி.எட் / எம்.காம், பி.எட் / பி.ஏ. எக்கனாமிக்ஸ், பி.எட். பாடப்பிரிவுகளில் பட்டம் பெற்று உயர் கல்விக்கான ஊக்க ஊதியம் பெற்றவர்களுக்கு இரு நீதி பதிகள் அமர்வு வழங்கியுள்ள தீர்ப்பினை எதிர்த்து அரசு தரப்பில் மேல்முறை யீடு செய்வதைக் கைவிட்டு, தொடர்ந்து ஊக்க ஊதியம் வழங்க வேண்டும்.

இடைநிலை ஆசிரியர் ஊதிய முரண்பாடுகளைந்து மத்திய அரசுக்கு இணையான ஊதியம் 01.01.2006 முதல் வழங்க வேண்டும். இடைநிலை ஆசிரியர் Pay Cell முடிந்து 2 ஆண்டுகளாக ஆண்டு



ஊதிய உயர்வு கூட இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ள நிலையினைக் கருத்தில் கொண்டு கூடுதலாக 5 Cell நீட்டித்து ஆணை வழங்க வேண்டும்.

ரூ.5400 தர ஊதிய பாதிப்பு களைதல் மற்றும் ரூ.5400 தர ஊதிய வழக்கின் தீர்ப்பினை எதிர்த்து செய்யப்பட்டுள்ள மேல் முறை யீட்டினை திரும்பப் பெற்று தனி நீதிபதியின் தீர்ப்பினை அமல்படுத்த வேண்டும்.

பணி நிரந்தரம் – பணிக்காலம்!

2004 முதல் 2006 முடிய தொகுப்பூதிய காலம் கால முறையில் பணிக்காலமாக ஆணை வேண்டும். முதல மைச்சர் அவர்களின் தேர்தல் கால வாக்குறுதியின்படி பகுதி நேர ஆசிரியர்கள் அனைவரையும் பணி நிரந் தரப்படுத்திட வேண்டும். பங்களிப்பு இல்லாத பழைய ஓய்வூதியத் திட்டம் தேர்தல் வாக்குறுதியின்படி அமல்படுத்திட வேண்டும்.

நியமனம் – தேர்வு!

ஆசிரியர் காலிப்பணியிடங்கள் அனைத்தையும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு காலமுறை ஊதியத்தில் நியமனம் செய்திட வேண்டும். சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வில் ஆசிரியர்கள் அனைவருக்கும் குறைந்தபட்ச தேர்ச்சி மதிப் பெண் 50 என நிர்ணயம் செய்திட வேண்டும்.

பணிக்காலத்தின் அடிப்படையில் ஆண்டுக்கு ஒரு மதிப்பெண் என்ற அடிப்படையில் வெயிட்டேஜ் மதிப்பெண்கள் வழங்க வேண்டும்.

அரசாணைகள் – திட்டங்கள்!

தொடக்கக் கல்வித்துறையில் ஆசிரியர்களுக்கு, குறிப்பாக பெண் ஆசிரியர்களுக்கு கடும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ள அரசாணை 243ஐ இரத்து செய்ய வேண்டும்.

TAPS திட்டத்திற்கான முழுமையான அரசாணை வெளியிட்டு நடைமுறைப் படுத்திட வேண்டும். NHIS திட்டத்தின் கீழ் முழுமையான கட்டணமில்லா சிகிச்சை அளிக்க ஆணை வழங்க வேண்டும்.

ஆசிரியர் நலன் – பாதுகாப்பு!

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அறிவிப்பின்படி ஆசிரியர்களின் குறைகளைத் தீர்த்திடும் வகையில் குறைதீர் குழுவினை அமைத்து விரைந்து தீர்வு காண வேண்டும். முதல மைச்சர் சட்டப்பேரவையில் அறிவித்தபடி 17.07.2025, 18.07.2025 உள்ளிட்ட தேதிகளில் அறவழியில் போராடிய ஆசிரியர்கள் மீதான காவல்துறை வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும்.

காலை உணவுத் திட்டம் மேற்பார்வை பணிகளில் இருந்து ஆசிரியர்களை விடுவித்தல் வேண்டும். சொத்து மதிப்பு பதிவேற்றம் என்ற பெயரில் எவ்வித வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடாமல் ஆசிரியர்கள் மத்தியில் தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்.

கல்வித்துறையில் தணிக்கை என்ற பெயரில் ஊழல் செய்து வரும் அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறோம்.

இந்தக் கோரிக்கைகளை அரசு உடனடியாக பரிசீலித்து ஆணைகள் வழங்க வேண்டும் என மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் நா. சண்முகநாதன் கேட்டுக்கொண்டார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வி.எம். தேவராஜ்

நவம்பர் 11 (1998)



வேலூர் மாவட்ட மற்றும் வேலூர் நகர அவைத் தலைவராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர், வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார் வேலூர் நகர்மன்றத் தலைவராக ஒரு முறையும் நகராட்சி உறுப்பினராக 23 ஆண்டுகள் பணியாற்றியவர்.

வேலூர் மாவட்ட நூலகத் தலைவர், மாவட்ட கூட்டுறவு சங்கம், வேலூர் கூட்டுறவு அச்சகத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பேரறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா கைதியாக ஓராண்டு சிறை வாசகத்தை அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

செஞ்சி ஏரிக்கரையில் அமைக்கப்பட்ட

சில்வர் கைப்பிடியை சேதப்படுத்திய மர்ம நபர்கள்!

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் ஆய்வு!

செஞ்சி, நவ.11 –

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள ஏரிக்கரையில் அமைக்கப்பட்ட சில்வர் கைப்பிடி தடுப்புகளை மர்ம நபர்கள் சேதப் படுத்தியுள்ளனர். சேதமான பகுதிகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

செஞ்சி பேரூராட்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள ஏரியை அழகுபடுத்தி, நடைப்பயிற்சி மேற்கொள்ளும் வகையில் கடந்த திமுக ஆட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் 1 கோடியே 93 லட்சம் மதிப்பீட்டில் ஏரியை மேம்படுத்தி பல்வேறு திட்டப் பணிகள் மேற் கொள்ளப்பட்டது.

இதில் நடைபயிற்சியில் ஈடுபடுபவர்கள் பாதுகாப்பாக செல்வதற்கு சில்வரிலான தடுப்பு கைப்பிடிகள் ஏரியை சுற்றிலும் அமைக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு மர்ம நபர்கள் சில்வர் கைப்பிடி தடுப்புகளை சேதப்படுத்தி உள்ளனர். இதனால் ஏரிக்கரையில் நடைபயிற்சி மேற்கொள்ளும் பொதுமக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் ஏரிக்கரைக்கு நேரில் சென்று சேதப்படுத்தியிருந்த சில்வர் கைப்பிடி தடுப்புகளை பார்வையிட்டனர். இதில்முன்னாள் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை மாவட்ட பிரதிநிதி பிரகாஷ் தொண்டரணி பாஷா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

மேலும் இதுபோன்ற செயலில் ஈடுபடும் நபர்களை கண்டுபிடித்து அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கு போலீசில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் பயன்பாட்டிற்காக லட்சக்கணக்கில் செலவு செய்து அமைக்கப்பட்ட கைப்பிடிகளை சேதப்படுத்திய சம்பவம் செஞ்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(8.11.2026 - 9.11.2026)



1. சென்னை துரைப்பாக்கத்தை அடுத்த செம்மஞ்சேரியில் குடும்பத் தகராறு காரணமாக கூலித் தொழிலாளி இரும்புக் கம்பியால் தாக்கிக் கொலை.

2. நெல்லை மாவட்டம் முக்கூடல் அருகே பாப்பாக்குடியில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் இளம் பெண் கழுத்தை நெரித்துக் கொலை.

3. விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே தாமனூரில் அரசு உதவி பெறும் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கும் மாணவியிடம் பாலியல் தொல்லை கொடுத்த பள்ளி தலைமையாசிரியர் சிக்கினார்.



4. சென்னை அயனாவரத்தில் மாநகரப் பேருந்தில் பயணம் செய்த கல்லூரி மாணவிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர் சிக்கினான்.

5. தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் ஐந்து வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லைக் கொடுத்த மாநகராட்சி இன்ஜினியர் சிக்கினார்.

6. தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி அருகே உள்ள அரசுப் பள்ளியில் பயிலும் மாணவிகளை தொடர்ந்து பாலியல் சீண்டல் செய்து, தட்டிக் கேட்ட பெற்றோர்களை தாக்க முயன்ற கூலித் தொழிலாளி சிக்கினான்.

7. சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் பொழுதுபோக்கு வந்த காதலர்களிடம் கத்தியை காட்டி மிரட்டி செல்போன் மற்றும் நகைகளை பறித்த கும்பல், தொடரும் வழிப்பறிகளால் பெசன்ட் நகர் கடற்கரையில் பொதுமக்கள் பீதி.

8. சென்னை பிராட்வே என். எஸ். சி. போஸ் சாலையில் சவாரிக்காக காத்திருந்த ஆட்டோ ஓட்டுநரை சரமாரியாக தாக்கி பணம் பறித்த ரவுடி சிக்கினான்.



9. சென்னை புளியந்தோப்பு அருகே கத்தியை காட்டி மிரட்டி பொதுமக்களிடம் தீபாவளி வசூல் செய்த இரண்டு ரவுடிகள் சிக்கினர்.

10. சென்னை ஓட்டேரி அடுத்த பெரம்பூர் பேரக்ஸ் ரோட்டில் கன்று குட்டியை தாக்கியதை தட்டிக் கேட்ட உரிமையாளருக்கு சரமாரியாக அரிவாள் வெட்டு.

11. சென்னை தங்க சாலையில் மது அருந்தியதை தட்டிக் கேட்டதால் வீட்டுக்கு வந்து பெண் மீது சரமாரியாக தாக்குதல், நகை பணத்தை திருடிச் சென்ற கும்பல்.

12. சென்னை யானைக்கவுனி காவல் நிலையத்தில் குற்ற வழக்கில் கைதான கைதி கழுத்தை அறுத்துக் கொண்டு தற்கொலை முயற்சி, பரபரப்பு.

13. தேனி மாவட்டம், சமதர்மபுரம் அருகே தீபாவளி நாளன்று சாலையை மறித்து பட்டாசு வெடித்து ரீல்ஸ் எடுத்த கும்பலைத் தட்டிக்கேட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் (SSI) செந்தில் குமார் அடித்துக் கொலை

14. சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே வேலூர் கிராமத்தில் முன்விரோதம் காரணமாக கொலை வழக்கில் ஜாமினில் வெளியே வந்த ரவுடி வெட்டிக்கொலை...

15. திருச்சி மாவட்டம் சமயபுரம் சுங்கச்சாவடி அருகே முன்விரோதம் காரணமாக கூலி வேலை செய்யும் இரண்டு சிறுவர்கள் வெட்டிக் கொலை ...

16. நெல்லை மாவட்டம் முக்கூடல் அருகே சமூக வலைதளத்தில் மனைவி அதிக நேரம் செலவழித்ததை கண்டித்து கழுத்தை நெரித்துக் கொலை செய்த கணவன் ...



17. திருவள்ளூர் மாவட்டம் சென்றான் பாளையத்தில் உள்ள காட்டுப் பகுதியில் இளம் பெண் கத்தியால் குத்திக் கொலை....

18. கடலூர் மாவட்டம், பெரியகட்டுப்பாளையம் பகுதியில் நண்பர்களுக்குள் ஏற்பட்ட வாய் தகராறில் ரவுடி கத்தியால் குத்திக் கொலை...

19. சென்னை வண்ணாரப்பேட்டை கல்லறை சாலையில் உள்ள டாஸ்மாக் கடையில் பாதுகாப்புப் பணியில் இருந்த இரண்டு போலீசார் மீது போதை ஆசாமிகள் தாக்குதல் ...